**DEPOSITION OF WITNESS**
Chapter XXIII Code of Criminal Procedure.)
- - - - -
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT MADHAVARAM.**

Calendar :
Miscellaneous : **CC. 77/2020**

Preliminary Register :
Sessions :
PW 9
Deposition of witness for :

Name : Srinivasan

Father's Name : Sundar

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :34

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02/03/2023.

**(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் பெரியமாத்துாரில் வசித்து வருகிறேன். நான் டைல்ஸ் வா்க் செய்து வருகிறேன்.1வது எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊரில் பேண்ட் வாசிப்பார் அந்த வகையில் எனக்கு தெரியும். 2 முதல் 4 எதிரிகள் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விவரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.தற்போது என்னிடம் காட்டடப்படும் கைப்பற்றுதல் மகசா் மற்றும் ஒப்புதல் வாக்குமுலத்தில் கண்ட சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசாா் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.04.2018 அன்று பகல் 2.30 மணிக்கு மாத்துாா் கேட் அருகே எம் 2 எம்.எம். காலனி போலீசாா் குற்ற எண்.140/2018 இ.த.ச பிரிவு 294(பி), 324, 506(1) என்ற வழக்கில் சம்மந்தபட்ட எதிரியான செந்தில் என்பவரை கைது செய்தாா்கள் என்றும் மேலும் செந்தில் தன்னிச்சையாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போலீசாா்

பதிவு செய்து கொண்டார்கள் என்றும் அதற்கு சாட்சிகளாக இருக்க என்னையும் என்னுடன் இருந்த கார்த்திக் என்பவரையும் போலீசார் கேட்டுகொண்டதன் பேரில் நானும் கார்த்திக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் எதிரி செந்தில் வீட்டின் அருகே இருந்து போலீசாரிடம் எடுத்து ஆஜர் செய்த உடைந்த செங்கல் ஒன்றையும் போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் கார்திக்கும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை: இல்லை**